**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 33/2025</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **14.10.2025** |
| **பெயர்** | **செல்வராஜ்** |
| **த/பெ** | **சிதம்பரம்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 04.03.p.m**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

நான் சென்ற குறுக்கு விசாரணையில் கேட்டு இருந்த பவர் பத்திரத்தின் நகல் மற்றும் கிரைய ஒப்பந்தத்தின் நகலினை நான் கொண்டு வந்துள்ளேனா என்றால் எடுத்துவரவில்லை. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனக்கு எதிராக எடுத்துக்கொள்ளப்படும் என்பதால் நான் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது உரிமையை நான் மறுதலித்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் அதை நான் படித்துள்ளேனா என்றால் கூடுதல் பதிலுரை தவறாக உள்ளது எனது சொத்திற்கு நான் தான் உரிமையாளர்.

அதற்கு மேல் எழுவினாக்கள் வரைய வேண்டி நீதிமன்றத்திற்கு கூடுதல் எழுவினாக்கள் சார்வு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் எங்களுடைய வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத எழுவினா. எங்களின் உரிமையை மறுக்கும் அந்த எழுவினாக்கள் அவசியமற்றதா என்றால் ஞாயம் இல்லாத எழுவினா. என்படி பிரதிவாதி தரப்பில் கூடுதல் எழுவினாக்கள் இல்லாமல் இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்கும் கேள்வி எனக்கு புரியவில்லை

இந்நீதிமன்றம் எனது உரிமையை பரிசீலினை செய்யாமல் தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் பரிசீலிக்க வேண்டும். சொத்து உரிமை சம்பந்தப்பட்ட கூடுதல் எழுவினா வைத்து விசாரிக்கப்பட வேண்டுமா என்றால் சாட்சி நான் ஏற்கனவே இந்த கேள்விக்கு பதில்

அளித்துவிட்டேன் என கூறுகிறார். என்படி விசாரணை செய்யாமல் எந்த பரிகாரம் கோரினாலும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் சரியல்ல, விசாரணை செய்த பிறகு தான் தீர்ப்பளிக்க வேண்டும். அந்த விசாரணைக்கு சொத்திற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமா என்றால் தாக்கல் செய்ய வேண்டும், நான் தாக்கலும் செய்துள்ளேன்.

எந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரைய பத்திரம், பட்டா, வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த கிரையப்பத்திரத்தின் உண்மை, செல்லும் தன்மையையும் நீதிமன்றத்திற்கு நிரூபணம் செய்ய வேண்டுமா என்றால் இந்நீதிமன்றத்திற்கு தேவைப்பட்டால் நிரூபணம் செய்ய வேண்டும். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் நிரூபணம் செய்வதற்கு மேற்சொன்ன கிரைய ஒப்பந்தம், பவர் பத்திரம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தேவையா என்றால் நீதிமன்றம் கேட்கும் பட்சத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

என்னிடம் பிரதிவாதிகள் வாடகைக்கு இல்லை என்றும் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே நில உரிமையாளர், வாடகைதாரா் உறவு எதுவும் இல்லை என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் என்னிடம் வாடகைதாரர்களாக உள்ளனர். நான் உரிமையாளராக இருக்கும் பட்சத்தில் தான் மேற்கூறியவாறு பதில் அளிக்க முடியும். சாட்சி சரியான கேள்வி இல்லை என கூறினார். என்படி எனது உரிமையை தீர்மானிக்காமல் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என கூறுகிறேனா என்றால் இந்நீதிமன்றம் இருதரப்பு நியாயங்களை பார்த்தபின்பு தான் தீர்ப்பளிக்க வேண்டும். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வது எனக்கான கடமையா என்றால் சாட்சி சரியா இல்லையா என்று பதில் அளிக்கவில்லை, நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன் என பதில் அளித்துள்ளார்.

நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள கிரையப்பத்திரத்துடன் பவர் பத்திரமும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இது என் வசம் சுவாதீனம் ஒப்படைக்க தாக்கல் செய்த வழக்கே தவிர பவர் பத்திரம் இந்த வழக்கிற்கு அவசியம் இல்லை. அதனால் என் கிரையப்பத்திரத்திற்கு அந்த பவர் பத்திரம் தான் ஆதாரம் என்றால் சரிதான். அதனால் அந்த பவர் பத்திரத்தை இந்நீதிமன்றமத்தில் தாக்கல் செய்தால் தான் இந்த வழக்கை பரிசீலினை செய்ய இயலும் என்றால் நீதிமன்றத்தில் தேவைப்படும்பட்சத்தில் பவர் பத்திரத்தை தாக்கல் செய்வேன். பிரதிடிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்கூறிய கேள்விக்கு சரியா, தவறா என சாட்சியிடம் கேட்டதற்கு சாட்சி பதில் அளிக்கவில்லை.

நான் எத்தனை நபர்களிடம் கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளேன்

என்றால் சாட்சி இந்த வழக்கிற்கு இந்த கேள்வி அவசியம் அற்றது என பதில் அளித்தார். வழக்கு சொத்திற்கு நான் கிரையம் பெற்றதற்கு முன்பு யார் உரிமையாளர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு விற்பனை செய்தவர்கள் அதன் உரிமையாளர்கள். லைலாசலாம் மற்றும் அவரின் வாரிசுகள் தான் உரிமையாளர்கள்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**
**விசாரணை முடியும் நேரம். 04.40.p.m.**